DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No. 95/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | பாலசுப்பிரமணியன் | Age | : | 48 |
| F/N | : | சின்னசாமி | Occupation | : | எர்த் மூவர்ஸ் வைத்துள்ளேன். |
| Village | : | கும்பகோணம் | | | |
| District | : | தஞ்சாவூர் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of June 2024.

**13.06.2024**

**(எதிரி ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

**1.** நான் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் குடியிருந்து கொண்டு எர்த் மூவர்ஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரி வில்வக்கனி என்பவரை எனக்கு தெரியும். எதிரி வில்வக்கனி கமுதியில் மணல் குவாரி வைத்திருந்தார். வண்டி ஒன்றுக்கு மாதம் ரூ. 1,65,000/- வாடகைக்கு என்னுடைய இரண்டு பொக்குலைன் வண்டிகளை கடந்த 24.08.2014ம் தேதி எதிரி வில்வக்கனி என்பவரிடம் ஒப்பந்தத்தின் பேரில் ஒப்படைத்தேன். மேற்படி எனது இரண்டு வாகனங்களையும் எதிரி பயன்படுத்தி வந்தார். ஒரு சில நாட்கள் வாகனத்தை பயன்படுத்துவார். ஒரு சில நாட்கள் வாகனத்தை பயன்படுத்த மாட்டார். ஒரு மாதம் முடிந்தவுடன் வாடகை தொகையை கேட்டதற்கு அடுத்த மாதம் சேர்த்து தருகிறேன் என்று கூறினார். மீண்டும் இரண்டாவது மாதம் கழித்து பணத்தை கேட்ட போது மீண்டும் ஒரு மாதம் கழித்து தருகிறேன் என்று கூறினார். மூன்று மாதம் கழித்து எதிரி வாடகை தொகையை தராததால் வண்டியை நான் எடுத்துக்கொள்கிறேன் என்று கூறியதற்கு வண்டியை எடுத்து செல்ல எதிரி அனுமதிக்கவில்லை.

**2.** பின்னர் கமுதி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து எனது வண்டியை திரும்ப பெற்றுக்கொண்டேன். மேற்படி காவல்நிலையத்தில் ஒரு மாதம் கழித்து வாடகை தொகையை தருவதாக எதிரி சொன்னார். ஆனால் அதன்படி எதிரி எனக்கு பணத்தை செலுத்தவில்லை. எதிரி எனக்கு ஒரு வண்டிக்கு ரூ. 4,95,000/-வீதம் மொத்தம் ரூ. 9,90,000/-ம் பணத்தை எனக்கு தரவேண்டும். அதன்பிறகு இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

அலுவலகத்தில் எதிரியின் மீது புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரி கடந்த 24.08.2014 ம் தேதி எனது இரண்டு வாகனங்களை பொருத்து இரண்டு ஒப்பந்த பத்திரத்தை எனக்கு எழுதிக்கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தையே தான் புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். ஒப்பந்த பத்திரத்தை எழுதிய முத்திரை தாளை நான் தான் வாங்கினேன். எந்த தேதியில் வாங்கினேன் என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. போலீசாரின் விசாரணையின் போது எனது வாகனங்களுக்கு உண்டான ஆவணங்களை சமர்ப்பித்தேனா என்றால் காண்பித்தேன். மேற்படி வாகனங்களுக்கு உண்டான ஆவணங்களை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்மனுவில் கடந்த 03.09.2015 ம் தேதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் மனுவில் மொத்த வாடகை ரூ. 6,90,000/–ம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த இடத்தில் எதிரி மணல் அள்ளினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் கமுதியில் அள்ளினார் எந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது.

2. சாட்சிகள் கார்த்திக், மாரிமுத்து மற்றும் தங்கராஜ் ஆகியோர்கள் என்னுடைய வாகனங்களை இயக்கிய நபர்கள் என்றால் மாரிமுத்து மற்றும் தங்கராஜ் மட்டும் தான் வாகனத்தை இயக்கிய நபர்கள். கார்த்திக் எங்கள் ஊரை சார்ந்த நபர் ஆவார். ஒப்பந்த பத்திரங்கள் எந்த தேதியில், எங்கு வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கும் எதிரிக்கும் எந்தவித உறவும் இல்லை என்றாலும், என்னுடைய பண பலத்தை பயன்படுத்தி எதிரி மீது இந்த வழக்கை பொய்யாக தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 95/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | கார்த்திக் | Age | : | 31 |
| F/N | : | ராஜேந்திரன் | Occupation | : | தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். |
| Village | : | கொம்பூதி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of June 2024.

**13.06.2024**

**(எதிரி ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

முதல் விசாரணை

நான் தற்போது சென்னையில் தங்கி தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். எதிரி வில்வக்கனி என்பவரை எனக்கு தெரியும். கடந்த 03.09.2014-ம் தேதி அ.சா.1 னிடம் நான் வாகனங்களுக்கு டீசல் வாங்கி வரும் வேலைக்கு சேர்ந்தேன். கடந்த 25.08.2014 தேதி முதல் 24.11.2014-ம் தேதி வரை அ.சா.1 ன் இரண்டு JCB வாகனங்கள் கமுதியில் உள்ள எதிரி வில்வக்கனி என்பவரின் மணல் குவாரியில் ஓடியது. மேற்படி இரண்டு வாகனங்களுக்கும் எதிரி வில்வக்கனி மூன்று மாதங்களாக வாடகை தரவில்லை. மேற்படி வாடகை தொகையை எதிரி வில்வக்கனியிடம் அ.சா.1 கேட்டார். ஆனால் எதிரி வாடகை தொகையை தராததால் கடந்த 03.09.2014-ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அ.சா.1 புகார் மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் கடந்த 03.09.2014-ம் தேதி தான் அ.சா.1 னிடம் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு அவரிடம் தங்கராஜ் மற்றும் மாரிமுத்து வேலை செய்தார்கள். நான் வேலைக்கு சேர்ந்த போது அ.சா.1 ன் வாகனங்கள் எங்கு ஓடிக்கொண்டிருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. டீசல் வாங்கி வர அ.சா.1 பணம் கொடுப்பார். டீசல் போட்டதற்கு உண்டான ரசீதுகளை அ.சா.1 னிடம் தான் கொடுப்பேன் என்றால் சரிதான்.

அ.சா.1 தான் எனக்கு சம்பளம் கொடுப்பார் என்றாலும், வாகனங்களை அவர் தான் பராமரித்து வருவார் என்றாலும் சரிதான். அ.சா.1 குவாரிக்கு வந்து வாகனங்களை



பார்வையிடுவாரா என்றால் பார்வையிடுவார். எந்த தேதியில் வந்து பார்வையிட்டார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எதிரியிடம் நானும், அ.சா.1ம் அவரது அலுவலகத்திற்கு சென்று பணத்தை கேட்டோம். எந்த தேதியில் கேட்டோம் என்று சரியாக ஞாபகம் இல்லை.

2. நாங்கள் நான்கு, ஐந்து முறை எதிரியின் அலுவலகத்திற்கு சென்றிருப்போம். கடந்த 24.11.2014–ம் தேதி குவாரியில் இருந்து வாகனங்களை எடுத்து வந்துவிட்டோம். வாடகை தராததால் வாகனங்களை எடுத்து வந்துவிட்டோம். 3 மாதம் கழித்து தான் அ.சா.1 எதிரியிடம் வாடகை பணத்தை மணல் குவாரியில் வைத்து கேட்டார். கடந்த 24.11.2014–ம் தேதிக்கு முன் வாடகை பணத்தை கேட்டார். பணத்தை கேட்கும்போது எதிரி சரியான பதில் சொல்லவில்லை. அதன்பிறகும் எதிரி அ.சா.1னிடம் வாடகை தொகையை தரவில்லை. கடந்த 24.11.2014–ம் தேதி வரை எதிரி வாகனத்தை இயக்கிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரத்தையே தான் நான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை ஏர்வாடி காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1ன் பணபலத்தை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 95/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | மாரிமுத்து | Age | : | 32 |
| F/N | : | மாது(எ)மாதேஷ்வரன் | Occupation | : | JCB வைத்து தொழில் செய்து வருகிறேன். |
| Village | : | பொன்னம்மாபேட்டை | | | |
| District | : | சேலம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of June 2024.

**13.06.2024**

**(எதிரி ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்டம் பொன்னம்மாபேட்டையில் குடியிருந்து கொண்டு JCB வாகனம் வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரி வில்வக்கனி என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 யை தெரியும். கடந்த 03.09.2014-ம் தேதி நான் அ.சா1 னிடம் JCB ஓட்டுநராக வேலைக்கு சேர்ந்தேன். கடந்த 25.08.2014-ம் தேதி முதல் 24.11.2014 ம் தேதி வரை அ.சா.1 ன் JCB வாகனம் ஒன்றும், Hitachi வாகனம் ஒன்றும் கமுதியில் உள்ள எதிரியின் மணல் குவாரியில் ஒரு வாகனத்திற்கு மாதம் வாடகை ரூ. 1,65,000/-ம் வீதம் ஓடியது. அதில் JCB வாகனத்தை மேற்படி மணல் குவாரியில் நான் தான் இயக்கினேன். வாகனங்களை ஒப்படைப்பதற்கு முன்பு எதிரியும், அ.சா.1 ம் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள். ஆனால் எதிரி அ.சா.1 ற்கு சேர வேண்டிய மூன்று மாத வாடகை தொகையை தரவில்லை. எனவே அ.சா.1 இராமநாதபுரத்தில் புகார் மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அ.சா.1 னிடம் கடந்த 03.09.2014-ம் தேதி வேலைக்கு சேர்ந்தேன். அதற்கு முன்பு அ.சா.1 ன் வாகனங்கள் எங்கு ஓடிக்கொண்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு அ.சா.1 தான் சம்பளம் தர வேண்டும் என்றால் சரிதான். மழை பெய்தால் மணல் குவாரியில் வாகனத்தை இயக்க முடியாது என்றால் சரிதான். ஒப்பந்த பத்திரத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். வாகனத்தை அ.சா.1 பராமரித்து வந்தார். ஒப்பந்ததாரர்கள் டீசல் போடுவார்கள். வாகனத்திற்கு அ.சா.1 டீசல் போடுவார் என்றால் சரியல்ல.

எதிரிக்கும், அ.சா.1க்கும் இடையே இருந்த பணம் கொடுக்கல், வாங்கல் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. மணல் குவாரிக்கு அ.சா.1 சுமார் 8 முறை வந்திருப்பார். 8 முறை பணத்தை திருப்பி தராத போதும் வாகனங்கள் எதிரியின் குவாரியில் ஓடிக்கொண்டிருந்தது என்றால் சரிதான். கடந்த 24.11.2014-ம் தேதி எதிரியின் குவாரியில் இருந்து வாகனங்களை எடுத்து வந்துவிட்டோம். தற்போது நீதிமன்றத்தில் சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1ன் பணபலத்தை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை தொலைபேசி வாயிலாக விசாரித்தார்கள். வழக்கு தொடுத்த பின்பு விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை - இல்லை**

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**